**செய்தி வெளியீடு எண்: 869** **நாள்: 29.11.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

கடந்த 15–ஆம் தேதி தமிழகத்தை தாக்கிய ‘கஜா’ புயல், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, கரூர், தேனி, சிவகங்கை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பெரும் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளது. அங்கு உள்கட்டமைப்பு வசதிகள் கடுமையாக சேதம் அடைந்து மின்சாரம் மற்றும் இணையதள இணைப்புகள் துண்டிக்கப்பட்டது. இதனால், இந்த மாவட்டங்களில் உள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரி செலுத்துவோர் அக்டோபர், 2018 திங்களுக்கான மாதாந்திர ரிட்டன் தாக்கல் செய்வதற்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர். ஆகையால், அக்டோபர் மாதத்திற்கான ரிட்டன் தாக்கல் செய்ய மேலும் கால அவகாசம் வழங்க வேண்டுமென்றும், அவ்வாறு தாமதமாக ரிட்டன் செலுத்தும் பட்சத்தில் வரி செலுத்துவோர் செலுத்த வேண்டிய தாமத கட்டணத்திலிருந்தும் விலக்களித்திட வேண்டுமென்றும் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மற்றும் இதர சங்கங்கள் அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தன.

இதனை கருத்திற்கொண்டு, அக்டோபர், 2018 திங்களுக்கான படிவம் GSTR 3B மற்றும் படிவம் GSTR 1 ஆகியவற்றை தாக்கல் செய்வதற்கு ஒரு மாத கால அவகாசம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையினை தமிழக அரசு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திற்கு பரிந்துரைத்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, அக்டோபர், 2018 திங்களுக்கான படிவம் GSTR 3B மற்றும் படிவம் GSTR 1 ஆகியவற்றை தாமத கட்டணம் இல்லாமல் வரி செலுத்துவோர் தாக்கல் செய்ய 20.12.2018 வரை கால நீட்டிப்பு செய்ய மன்றம் இசைவளித்துள்ளது. அதனடிப்படையில், 29.11.2018 அன்று அரசு ரிட்டன் தாக்கல் செய்வதற்கான கால நீட்டிப்பு அறிவிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**